தமிழ்ச்சிட்டு
சிறுவர்
கலை இலக்கியத்
திங்களிதழ்
குரல் : 23
இசை : 2.

திருக்குறள் அறிவு

கற்க! கற்க! கற்க!
கற்பன வற்றைக் கற்றவை வழியில்
நிற்க! நிற்க! நிற்க!

சொல்க! சொல்க! சொல்க!
சொல்லுஞ் சொல்லால் மற்றவர் சொல்லை
வெல்க! வெல்க! வெல்க!

பணிக! பணிக! பணிக!
பணிவாய் நின்றே பலவுஞ் செய்யத்
துணிக! துணிக! துணிக!

விருந்து! விருந்து! விருந்து!
விருந்துக் கிட்டு மிகுந்ததை என்றும்
அருந்து! அருந்து! அருந்து!

பொறுக்க! பொறுக்க! பொறுக்க!
பொறுத்துக் கொண்ட தீமையை உடனே
மறக்க! மறக்க! மறக்க!

எண்ணு! எண்ணு! எண்ணு!
எண்ணிய வற்றுள் ஏற்றதை உடனே
பண்ணு! பண்ணு! பண்ணு!

ஒழுகு! ஒழுகு! ஒழுகு!
ஒழுக்கம் ஒன்றே கற்றவர்க் கென்றும்
அழகு! அழகு! அழகு!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்
-1960

இயற்கை

தமிழூர் — தேன்

இயற்கை அழகைப் பாருங்கள்!
இன்பம் நெஞ்சில் கூடுமே!
அயர்வை நீக்கும் மருந்துமாய்
அமைதி நம்முள் கூட்டுமே!

இயற்கை ஒழுங்கை நோக்கினால்
எல்லை யற்ற வியப்புதான்!
உயர்ந்த அறிவை உணர்த்தியே
உள்ளம் செப்பம் செய்யுமே!

இயற்கை உணவை உண்ணுங்கள்
எளிதில் செரித்துக் குருதியில்
வியக்கும் வகையில் ஒன்றுமே!
விரைந்து வினைகள் செய்யுமே!

இயற்கை நீர்மம் பருகுங்கள்
என்றும் ஊக்கம் உடலிலே!
மயர்வை நீக்கும் மருந்துமாய்
மாறி மகிழ்வை அளிக்குமே!

இயற்கை மருந்தை என்றுமே
இயன்ற அளவில் உண்டிடத்
துயர்கள் இல்லை! இல்லையே!
தெளிவு! தென்பு! பெருகுமே!

*

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

“இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

— பாவலரேறு

குரல் : 23, இசை : 2

தென்மொழி கும்பம் 2031 (பிப்பிரவரி 2000) இதழின் இணைப்பு

நிறுவனர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
‘தென்மொழி’
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை– 601 302.
தொலைபேசி எண் : 239 0231

தமிழிலேயே பயிலுவோம்!

உடல் அளவில் நாம் பெரியவர்களாக இயல்பாக வளர்கிறோம் இல்லையா? அப்படி நம் அறிவு இயல்பாகவே வளர்ந்துவிடுவது இல்லை.

நம் அறிவை அம்மா அப்பாவிடமிருந்தும், அண்டை நண்பர்களிடமிருந்தும், பள்ளிக்கூடங்களிலிருந்தும், ஊரிலிருந்தும், நாட்டிலிருந்தும் பெற்றுக் கொள்கிறோம்.

இவற்றுள், அறிவை வளர்த்துக் கொள்ள நமக்குப் பெரிதும் துணை நிற்பன பள்ளிக் கூடங்கள்தாம்.

எனவே, பள்ளி வழிக் கல்வியை விளங்காமல் படிக்கக் கூடாது. பாடங்கள் எவ்வாலற்றையும் விளக்கமாகவும், விரிவாகவும் கறக வேண்டும். சொவ்வப் பெறுவதை மட்டும் அல்லாமல் எல்லாவற்றையும் வினா எழுப்பித் தெரிந்து கொள்ள வேண்டும்.

அப்படி நாம் எளிதே விளங்கிக் கல்வி கற்கவே நமக்கு நம் மொழி பயன்படுகிறது.

அதே போது, நம் மொழி அல்லாத பிற மொழிகளில் நாம் விளங்கிக் கொள்ள முடிவதில்லை.

ஆங்கிலத்தைப் படிப்பதானாலும், தமிழ்வழியேதான் விளங்கிக்கொண்டு ஆங்கிலத்தைக் கற்க முடியும்.

எனவே, தாய்மொழிவழி அல்லாமல் பிறமொழியின் மூலம் பிறர் படிக்கலாமே அல்லாமல் விளங்கிக் கொள்ள முடியாது.

முழுமையாய் வளங்கிக்கொள்ள முடியாமல் போனால் அறிவு பெற்று அறிவாளிகளாக - அறிஞர்களாக முடியாது.

எனவே, நம் தாய்மொழியிலேயே பயிலுவோம், தகுதிசான்றவர்களாக நாம் வளர்வோம்.

*

சொல்லடை

1		7		
2			8	
		3		9
4				
	6		5	

இடமிருந்து வலம்

1. தமிழ்நாட்டின் நீளமான ஆறு தோன்றும் இடம்.
2. மலையின் உச்சியை இப்படிச் சொல்வார்கள்.
3. நிலவைக் காணமுடியாத நாள்
4. சந்திப்பு (4)
5. மாடுகள் விரும்பி உண்ணும்

வலமிருந்து இடம்

3. கன்னட நாட்டினர் திமிர் இதனால் தெரிகிறது.

மேலிருந்து கீழ்

1. திருவள்ளுவர் சிலை
7. மக்கள் கூடிவாழும் அமைப்பு.
8. இது தின்ன யாராவது கூலி கேட்பார்களா?
9. இது இல்லாத வீடா?

கீழிருந்து மேல்

6. விலை அதிகமாக இருந்தால் இப்படிக் கூறுவார்கள்.

(சொல்லடை விடை பக்கம் 12)

இளமைக் காலம் என்பது கல்வியைக் கற்றுக் கொள்ளும் காலம் மட்டும் இல்லை; ஒழுக்கத்தையும் பண்பையும் கற்றுக் கொள்ள வேண்டிய காலமுமாகும். விதையில் உள்ள வேம்பின் கசப்புத்தான் இலையிலும் கசக்கின்றது; பட்டையிலும் கசக்கின்றது; காயிலும் கசக்கின்றது; கொட்டையைப் பிழிந்து வந்த நெய்யிலும் கசக்கின்றது. ஆகவே இளமைக் கசப்பு என்றும் போகாது.

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்



யானை

யானையைப் பற்றி நாம் நிறையத் தெரிந்து வைத்திருக் கின்றோம் இல்லையா?

மிகப் பழங்காலங்களில் யானையைக் காட்டிலும் பெரிய விலங்குகள்கூட இருந்தன. ஆனால் இன்றைக்கு நிலத்தில் வாழ்கிற விலங்குகளுள் யானை தான் மிகவும் பெரிய விலங்கு.

யானை ஆசிய கண்டங் களிலும், நடு ஆப்பிரிக்கப் பகுதிகளிலுமே உண்டு.

ஆப்பிரிக்க யானை உருவில் மேலும் பெரியவை. அவற்றின் காதுகளும், மருப்புகளும் (தந்தங்களும்) நீளமானவை. ஆயினும் அவற்றின் தலை அமைப்பு சிறியது.

ஆப்பிரிக்க யானைகளில் ஆண் யானை, பெண் யானை இரண்டிற்குமே மருப்புகள் உண்டு.

பொதுவாக யானை கருப்பு நிறத்தினதாக இருந்தாலும் வெள்ளை நிறமுள்ள யானைக ளும் உண்டு.

யானையின் தோல் மிகவும் தடிப்பானது. மயிர்களும் அதிகம். யானையின் வாயருகி லும், தும்பிக்கையின் அருகிலும் உள்ள மயிர்கள் உணர்ச்சி யுள்ளவை.

யானையின் தும்பிக்கையே யானைக்குப் பெரிதும் உதவக் கூடியது. தும்பிக்கையின் நுனியில் விரல்போல் பிளவுகள் உண்டு. அதைக் கொண்டே அது தரையில் கிடக்கும் பொருள்களை எடுக்கிறது; தழை களைப் பறித்து உண்ணுகிறது.

யானை நிலைத் திணைகளை (தாவரங்களை)யே உண்ணக் கூடியது. அது, ஒரு தடவைக்கு ஒரு குட்டியே போடும். யானை வாழுங்காலம் ஏறத்தாழ நூறு (100) ஆண்டுகள்தாம்.

யானையைக் குறித்துத் தமிழ் இலக்கியங்களில் ஏராளமான குறிப்புகள் உள்ளன.

இரண்டாயிரம் ஆண்டுக ளுக்கு முந்தைய கழகக் கால இலக்கியங்களிலேயே நூற்றுக் கணக்கான இடங்களில் யானையைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

யானைக்கு நம் தமிழ் மொழியில் பல பெயர்கள் உண்டு.

யானை, வேழம், களிறு, படி, உம்பல், மாதங்கம், கரிமா, களபம், கம்பமா, கைம்மா

—போன்றவை யாவும் யானையைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களாகும்.

*

பால்வெளி மண்டலம்

"நம்பி, உன் நண்பர்களை எல்லாம் அழைத்து வா" — என்றார் அவன் தந்தை.

இரவு ஏழு மணி ஆகி இருந்ததால் சற்று இருள் பரவத் தொடங்கி இருந்தது.

நேற்று மாலை மின்சாரம் நின்று போனபோது பேசிக் கொண்டிருந்த இளங்கோ, எழில், குழலி உட்பட அனைவரையும்

அழைத்து வந்தான் நம்பி.

"வாங்கடா கண்ணுங்களா..... இப்படி உட்காருங்கள்" — என்று நம்பியின் அப்பா சொன்னவுடன் எல்லாரும் நெருக்கிப் பிடித்துக் கொண்டு உட்காரத் தொடங்கி விட்டனர்.

"நாம் இப்போது ஒருமணி நேரத்துக்கு அறுபது அயிர மாத்திரி (கிலோ மீட்டர்) செல்லுகிற பேருந்து ஒன்றில் ஏறத்தாழ முந்நூறு அயிர மாத்திரி (கி.மீ.) தொலைவில் உள்ள திருச்சிக்குப் போகிறோம் என வைத்துக் கொள்வோம். திருச்சிக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்?" — என்றவுடன்....

"ஐந்து மணி நேரமாகும் ஐயா....." — என்றாள் குழலி.

"சரியாய்ச் சொன்னாய். அதே போல்தான் ஒலி இருக்கிறதில்லையா, அதாவது ஓசை அது ஒரு நொடிக்கு முந்நூற்று அறுபது மாத்திரி (மீட்டர்) அளவு வேகத்தில் செல்லக்கூடியது.

ஆனால் அதைப் போல பல மடங்கு அதிகமான வேகத்தோடு செல்லக் கூடியது ஒளி. அதாவது வெளிச்சம்.

ஒளியின் வேகம் எவ்வளவு தெரியுமா?" — என்றார் நம்பியின் தந்தை.

யாருக்கும் தெரியாததால் கசமுசவெனப் பேசின பிள்ளைகள்.

"சரி நானே சொல்கிறேன், கேளுங்கள். ஒளி நொடி ஒன்றுக்கு ஏறத்தாழ மூன்று இலக்கம் (3,00,000) அயிர மாத்திரி(அ.மா.) அளவிற்கு விரைவாகச் செல்லக் கூடியது. எப்படி பார்த்தீர்களா? நாம் விரல்களைச் சொடுக்குகிற அந்த

சொடுக்கு நேரத்தில் மூன்று இலக்கம் அ.மா. அளவிற்குச் சென்று விடும்.

அந்த அளவு வேகமாகச் செல்லக் கூடிய ஒளி ஒரு நிமையத்திற்குத் தொண்ணூறு இலக்கம் (90,00,000) அ.மா. சென்று விடும்.

அதேபோல் ஒரு மணி நேரத்திற்கு, நாள் ஒன்றுக்கு, ஒரு மாதத்திற்கு அது எவ்வளவு தொலைவு செல்லும் என்பது போல், ஆண்டு முழுக்க ஒளி செல்லுமானால் எவ்வளவு தொலைவு செல்லும் தெரியுமா?

கோடிக் கோடி அயிர மாத்திரிகள் தொலைவிற்குச் சென்று விடும்.

இந்த மிக நெடிய தூரத்தைத் தான் ஒளி ஆண்டுத் தொலைவு என்று கணக்கிடுகிறார்கள்.

இந்த ஒளி ஆண்டுக் கணக்கைக் கொண்டுதான், விண்மீன்கள், விண்மீன் மண்டலங்கள் இவையெல்லாம் எவ்வளவு தொலைவில் உள்ளன, எந்த அளவு பரப்பளவு கொண்டன என்பவற்றை யெல்லாம் கணக்கிடுகிறார்கள்.

அந்தக் கணக்கைக் கொண்டு நம் பால்வெளி மண்டலத்தைப் பற்றி நாளை நாம் தெரிந்து கொள்ளலாம், போய் வாருங்கள்....'' — என்று நம்பியின் தந்தை சொன்னவுடன் ஓடிப் போனவர்கள், வீட்டு வாயிலில் நின்று வியப்பாய்ப் பேசிக் கொண்டனர்.

''அப்பப்பா... எவ்வளவு தொலைவு இல்லை...!.'' — என்று வியந்து பேசினாள் குழலி. ❑

நெய்ம(தைல) மரங்கள்.

எங்குப் பார்த்தாலும் இப்போது நெய்ம(தைல) மரங்களாக நடப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

இது ஆத்திரேலியாவிலிருந்து சதுப்பு நிலப்பகுதிக்காகக் கொண்டு வரப்பட்டது.

இது கொடிய நீர் உறிஞ்சி மரம் என்பது பலருக்குத் தெரிவதில்லை. இது வளர்கிற பகுதியில் வேறு எந்தச் செடியும் வளர முடியாது. காற்றில் உள்ள ஈரப்பசைகூட இல்லாமல் போய்விடும்.

இதை நீர்வளம் உள்ள மலைப்பகுதியில் அல்லாமல் நிலப் பகுதியில் வளர்க்கக் கூடாது. அப்படி வளர்வதால் நல்ல நிலமும் பாலை நிலம் போல மாறிப் போகும்.

மலையில் வளரும் இம் மரத்திலிருந்து தான் தலைவலிக்கான மர நெய் எடுக்கலாமே அல்லாமல், நிலத்தில் விளைவதில் மரநெய் வராது.

கண்ணாயிரம் பெற்ற ஒளி



ஊரை அடுத்த பாழ் மண்டபம் தான் கண்ணாயிரத்தின் தங்குமிடம்.

பகல் முழுக்கப் போவோர் வருவோரிடமெல்லாம் இரந்து(பிச்சை) பெற்ற பொருள்களைக் கொண்டே அவன் வாழ்ந்தான்.

கண் தெரியாத கண்ணாயிரத்துக்கு மனத்துள் எத்தனையோ ஆசைகள் இருந்தன. ''நமக்குக் கண் தெரிய வேண்டும், திருமணம் செய்து கொள்ள வேண்டும், மனைவி மக்களுடன் செல்வச் செழிப்போடு மாளிகையில் வாழ வேண்டும்'' — இப்படி ஓயாமல் எண்ணிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் உணவு தேடி அலைந்து வந்த களைப்பில் கோயில் வாயிலின் ஓரமாய்த் தூங்கியவன் நீண்ட கனவே கண்டுவிட்டான்.

கனவில், அவன் நம்பிய தெய்வம் ஒன்று எதிரில் வந்து, ''கண்ணாயிரம்... உன் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். ஆனால், நீ ஒரு வேண்டுதலுக்கு மேல் கேட்கக் கூடாது. ஒன்றே ஒன்று, எதுவானாலும் சரி, நீ விரும்புவதைக் கேள்'' — என்று கூறியது.

உடனே, கண்ணாயிரம், தனக்குக் கண் தெரியவேண்டும் என்று கேட்க வில்லை. 'கையேந்திப் பிழைப் பவனுக்குக் கண் குருடாக இருப்பதே நல்லது. அப்படி இருந்தால்தான் மக்கள் இரக்கப்பட்டு உதவுவார்கள்' — என்பது அவன் எண்ணம்.

முதியவனான அவன், திருமணம் செய்து கொள்ளவேண்டும் எனக் கேட்பது சரியில்லை. இளைஞனாக மாறவேண்டும் என்று கேட்கலாம். ஆனால்அப்போதும் அவன் இரப்பாளி யாக(பிச்சைக்காரனாக)த் தானே இருக்க முடியும்.

கண்ணாயிரம், செல்வச் செழிப்போடு இருக்க வேண்டும் என்றும் கேட்க வில்லை. அப்படி கேட்டால் தன்னை எவரும் எளிதில் ஏமாற்றிவிடுவார்களே என்று எண்ணினான்.

இப்படி ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தவனுக்கு எதுவுமே சரியில்லாமல் போகவே, சற்று ஆழ்ந்து எண்ணி அத் தெய்வத்திடம் அவன் கேட்டான்:

''என் பேரனும் பேத்தியும், ஏழடுக்கு மாளிகையில், தங்கக் கிண்ணத்தில் பாலும் சோறும் உண்பதை என் மனைவியின் பக்கத்தில் அமர்ந்து, நான் இரு கண்ணாலும் பார்க்க வேண்டும்'' — என்று ஒரே ஒரு வேண்டுகோளைச் சொன்னான்.

உடனே கனவில் வந்தத் தெய்வம் அவனின் அறிவுத் திறத்தை மகிழ்ந்து பாராட்டி அவன் விருப்பத்தை நிறைவேற்றியது.

கனவு கலைந்து எழுந்த கண்ணாயிரம் இவை யெல்லாம் கனவு என்று எண்ணிப் பெரும் வருத்தம் கொண்டான்.

இருப்பினும், எப்படிக் கனவில் நாம் எண்ணிப் பார்த்து தொகுத்துச் சுருக்கமாய்ச் சொன்னோமோ, அப்படி எல்லாவற்றையும் சிந்தித்து எண்ணித் தொகுத்து நம் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று தெளிவு பெற்றான்.

அந்த அறிவு வளர்ச்சியே கண் போனாலும் தாழ்வில்லை என வாழ்க்கைக்கு ஒளியூட்டும் என அறிந்து கொண்டான்.

*

எழுத்துகளைக் கொண்டு...

எழுத்துகளைக் கொண்டு
வகைவகையாகப் படங்கள் வரைய முடியும்.

நீங்களும் வரைந்து பழகுங்களேன்.



— பொள்ளாச்சிநசன்

உங்களை 'யார்' என்று கேட்கும் இடங்களிலும், கேட்பவரிடமும் 'நான் ஒரு தமிழன்' என்று உரக்கக் கூறுங்கள். மொழியின் பெயரால் இனத்தைக் கூறுவதே அறிவுக்குப் பொருந்தும் செயல். நாடும் மொழியின் பெயரால்தான் அழைக்கப்படும். உருசிய மொழி பேசுபவர் உருசியர்; அவர் வாழும் நாடு உருசியா. ஆங்கில மொழி பேசுபவர் ஆங்கிலேயர்; அவர் வாழும் நாடு இங்கிலாந்து; சீன மொழி பேசுபவர் சீனர்; அவர் வாழும் நாடு சீனம். அப்படியே நாம் பேசும் மொழி தமிழ்; நம் நாடு தமிழ்நாடு; நாமும் தமிழரே! இக் கொள்கைக்கு மாறாக நடப்பவர் தமிழர் ஆகார்.

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்

சிட்டுக்கு வந்த மடல்கள்

✳ நீண்ட இடைவெளிக்குப் பின் 'சிட்டைப் பார்க்க என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாமல் போனது. தமிழ்ச் சிட்டை இருகை நீட்டி மனமுவந்து வரவேற்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். வருக தமிழ்ச்சிட்டு. வாழ்த்துகள். என் பாராட்டுகள்.

— பாவலர் இளஞ்சித்திரன்,
சென்னை - 48

✳ மாணவர்களுக்குத் தமிழ்ச்சிட்டு ஆற்றிய பணி அளப்பரியது. 'தமிழ்ச்சிட்டு' மீண்டும் தன் சிறகு விரித்துப் பறக்கத் தொடங்கி இருப்பது உயர்வானது; வணங்குதற் குரியது.

— பொள்ளாச்சிநசன்,
பொழில்வாய்ச்சி(பொள்ளாச்சி)

✳ தமிழ்ச்சிட்டு மீண்டும் பறக்க, தமிழ்நலம் மேலும் சிறக்க உள்ளது கண்டு மகிழ்வுற்றேன்! தங்களின் முயற்சிக்கு என் பாராட்டுகள்! வாழ்த்துகள்!

— பாவலர் ப. எழில்வாணன்,
பள்ளப்பட்டி

✳ 'தமிழ்ச்சிட்டு' மீண்டும் சிறகடிக்க விருப்பது அறிய மகிழ்ச்சியே. நன்றி.

— முனைவர் கடலூர் மணிமாறன்,
கிருட்டிணராயபுரம்.

✳ 'சிட்டு' கண்டதும் கண்ணீர் பெருக்கெடுத்தது. நீண்ட நெடுநாள் கழித்துப் பார்த்ததும் மகிழ்ச்சி வெள்ளம் பாய்ந்தது, மிகவும் நன்றாக உள்ளது.

— குழந்தை ஈகவரசன், திருச்சி

✳ சிறுவர்கள் இதழான தமிழ்ச் சிட்டு கிடைத்தது. எளிய நடையில் இதழைக் கொண்டு வருகிற எண்ணம் பாராட்டப்பட வேண்டியது. பின் அட்டையில் அம்மா, மகள் உரையாடல் பாராட்டத் தக்கது.

— செ. கோவிந்தராசன், திருச்சி

'தமிழ்ச்சிட்டு'
சலுகை விலையில் பழையபடிகள் — அரிய வாய்ப்பு

1967 முதல் 1995 வரை வெளிவந்த தமிழ்ச்சிட்டு இதழ்கள் (இடையில் இல்லாத இதழ்கள் தவிர்த்து) அனைத்தும் ஐந்து கட்டுகளாகக் கட்டப்பெற்று மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறது.

ஐந்து கட்டுகளும் உரு. 50.00 மட்டுமே.அஞ்சலில் பெற மேலும் உரு. 30.00 இணைத்து அனுப்பவும்.

(குறைந்த படிகளே இருப்பதால் விரைந்து எழுதுங்கள்.)

முகவரி:

அமைச்சர், 'தமிழ்ச்சிட்டு',
தென்மொழி, மேடவாக்கம் கூட்டுச்சாலை, சென்னை 601 302.

பாவலரேறு தமிழ்ச்சிட்டு

பாவலர் **இளஞ்சித்திரன்**

இனிக்க இனிக்கப் பேசும் சிட்டு;
எங்கள் கைகளில் தமிழ்ச்சிட்டு.
தனிக்குரல் எடுத்துப் பேசும் சிட்டு;
தமிழிசை பாடும் தமிழ்ச்சிட்டு.

அய்யன், அம்மை, அப்பன் எங்கள்
ஆசான் கண்ட தமிழ்ச்சிட்டு.
மெய்யன், பாவல ரேறு பொத்தி,
விரும்பி வளர்த்த தமிழ்ச்சிட்டு.

சிறுவர், சிறுமியர் வாய்களில் மணக்கும்
செந்தமிழ் ஊட்டும் தமிழ்ச்சிட்டு.
நறுநெய்ப் பொங்கல் போல்தேன் பாக்கள்
நமக்கெலாம் தந்த தமிழ்ச்சிட்டு.

ஒழுக்கம், உண்மை, உயரிய கொள்கை
ஓங்கிட வந்தது தமிழ்ச்சிட்டு.
விழுப்பம் உடைய வாழ்க்கைக் கதைகள்
வியக்கச் சொல்லும் தமிழ்ச்சிட்டு.

இல்லம் தோறும் கதவுகள் தட்டி,
எந்தமிழ் வளர்க்கும் தமிழ்ச்சிட்டு.
வெல்லத் தமிழை வீதிகள் தோறும்
மேலாய்ப் பரப்பும் தமிழ்ச்சிட்டு.

சிறகுகள் விரித்தது; பறக்கத் துணிந்தது!
சிந்தையை அள்ளும் தமிழ்ச்சிட்டு.
உறவுகை நீட்டித் தமிழரை இணைப்பது;
ஒப்பிலா அழகுத் தமிழ்ச்சிட்டு.

*



தமிழினம் உய்ந்திடப் பறந்துவா!

முனைவர் கடவூர் மணிமாறன்

செந்தமிழ்ச் சிட்டே! சிறந்துவா!
சிறகினை விரித்துப் பறந்துவா!
சிந்தனைச் செய்திகள் செப்பிடவா!
சிறுமைகள் கண்டு பொங்கிடவா!

பாவல ரேறாம் அய்யாவின்
பன்முகச் சிறப்பினைப் பகர்ந்திடவா!
மேவிடும் புதுமைகள் மிழற்றிடவா!
மேன்மைகள் தமிழ்க்கு மிளிர்ந்திடவா!

சிறுவர் மனங்களைச் செதுக்கிடவா!
செழுமை வளமைகள் புதுக்கிடவா!
அறிஞர் சுற்றம் போற்றிடவா!
அழிவும் இழிவும் மாற்றிடவா!

முத்தமிழ் முழக்கம் செய்திடவா!
முன்னோர் பழம்புகழ் பாடிடவா!
பித்தர்கள் முத்திரை கிழித்திடவா!
பெருமைகள் சாற்றிடப் பறந்துவா!

தமிழின் சீர்மை உயர்த்திடவா!
தருக்கர் வெம்பகை சாய்த்திடவா!
கமழும் கவின்தமிழ் காத்திடவா!
கடமை உணர்வுகள் பூத்திடவா!

இனிக்கும் தமிழினைப் புகழ்ந்திடவா!
இளையோர் நெஞ்சம் மகிழ்ந்திடவா!
தனித்தமிழ் விருந்து படைத்திடவா!
தமிழினம் உய்ந்திடப் பறந்துவா!

*

உங்களுக்குத் தெரியுமா?

கடந்த 30.1.2000 - அன்று காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட நினைவு நாள்.

அவரைக் கொன்றது யார் தெரியுமா? கோட்சே எனும் பார்ப்பனன்தான், 'இசுமாயில்' என்று தன் கையில் பச்சைக் குத்திக் கொண்டும் முசுலீம் போலப் புனைவு செய்துகொண்டும் சுட்டுக் கொன்றான்.

அப்படி முசுலீம் போலப் புனைவு செய்துகொண்டு கொன்றால், முசுலீம்தான் கொன்றான் என்று நினைத்து எல்லாரும் முசுலீம்களை எதிர்த்து அடிக்கவும், கொல்லவும் செய்வார்கள் - அதன்மூலம் கலவரம் ஏற்படுத்தலாம் என்பதே அவன் திட்டம்.

அவன் சார்ந்த ஆர்.எசு.எசு. எனும் வன்முறை அமைப்பே அவனுக்கு அந்தத் திட்டத்தைச் சொல்லியது.

எனவே - காந்தியடிகள் சுடப்பட்டு இறந்த நாளில் நாம் காந்தியை நினைப்பதைவிட, ஆர்.எசு.எசு. போன்ற வன்முறை அமைப்புகளை எதிர்க்க வேண்டும் என்றே எண்ண வேண்டும்.

❑

சொல்லடை: விடை

1 கு	ட	7 கு	ம	லை
2 ம	லை	மு	8 க	டு
ரி	வி	3 கா	ரு	9 வா
4 மு	னை	ய	ம்	யி
னை	6 ஆ	ம்	5 பு	ல்